**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 20.08.2025**
**OS. No. 66/2019**
**வழக்கு சாட்சி DW.2–அய்யனார் , த/பெ.முத்துசாமி (எ) வெள்ளையன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நான் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. வீட்டில் தான் உள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதேனும் சார்வு செய்யப்பட்டதா என்றால் இல்லை, பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். வாதிகளை தாவா சொத்தில் தொந்தரவு செய்யக்கூடாது என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள், அளவுகள் ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை யார் கிரையம் பெற்றுள்ளார்கள், எந்த வருடம் கிரையம் பெற்றார்கள், எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) 1ம் பிரதிவாதி மாரியம்மாள் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விவரம், அதன் சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது. யார், யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வரதராஜனின் குடும்பத்தார் மீது தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி மாரியம்மாளின் தகப்பனார் மாரிமுத்து கவுண்டரை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். மாரிமுத்து கவுண்டரின் தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாரிமுத்து கவுண்டருக்கு பூர்வீகமாகவும், சுயசம்பாத்தியமாகவும் எவ்வளவு நிலம் பாத்தியம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாரிமுத்து கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவியின் பெயர் பாப்பா அவர்களுக்கு ஒரு மகன், மூன்று மகள்கள் உள்ளனர். அவர்களுக்கு பிறந்த மகன் பெயர் வைத்தியலிங்கம் ஆகும். இரண்டாவது மனைவியின் பெயர் சின்னபாப்பா அவர்களுக்கு நான்கு மகன்கள், மூன்று மகள்கள் உள்ளனர்.

3) மாரிமுத்து கவுண்டர் மற்றும் அவரது முதல் மனைவியின் வாரிசு வைத்தியலிங்கம், இரண்டாவது மனைவி மற்றும் அவரது வாரிசு ஆகியோர்கள் 06.06.1964 ல் பூர்வீக சொத்தை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த சமயத்தில் விஸ்வநாதன், 1ம் பிரதிவாதி மாரியம்மாள் மற்றும் மாரியம்மாளின் சகோதரிகள் ஆகியோர்கள் பிறக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் மேற்படி நபர்களை பாகபிரிவினை பத்திரத்தில் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வைத்திலிங்கத்திற்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நிறைய நபர்களுக்கு விற்றுள்ளார் என்றால் சரியல்ல, வனவாசியை சேர்ந்த ஒருவருக்கு மட்டும் விற்றுள்ளார்.

4) மாரிமுத்து கவுண்டரின் மகன் அங்கமுத்து, விஸ்வநாதன், நாராயணசாமி, சின்னபையன், வைத்திலிங்கம் ஆகியோர்கள் தற்போது வரை சுமார் 18 நபர்களுக்கு மேல் பூர்வீக சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. 13.07.1964 ல் லட்சுமியம்மாளுக்கு வைத்திகவுண்டர் மகன் மாரிமுத்து கவுண்டர், வைத்தியகவுண்டர் மனைவி பெருமாயம்மாள் சேர்ந்து 1–1/2 ஏக்கர் நிலத்தை விற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 06.06.1973 ல் செல்லமுத்துவிற்கு கடனுக்கு ஆதாரமாக சின்னப்பாப்பாள் மற்றும் அவரது மகன்கள் அங்கமுத்து, நாராயணசாமி, சின்னையன், விஸ்வநாதன் ஆகியோர்கள் கடனை திருப்பி செலுத்தாததால், அந்த அடமான பத்திரம் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து, அதில் கண்ட சொத்தை நீதிமன்றத்தில் ஏலம் விடப்பட்டது என்றால் அவ்வாறு எந்த ஏலமும் விடவில்லை. அந்த கடனை திருப்பி அடைப்பதற்காகத்தான் மேற்கண்ட நபர்கள் தாவா சொத்தை 1ம் வாதி வரதராஜனுக்கு 08.11.1990 ல் விற்பனை செய்தார்கள் என்றால் சரியல்ல. கடன் பெற்றதும், சொத்தை விற்றதும் எனக்கு தெரியாது என்றும், அந்த ஆவணங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) தற்போது வரை தாவா செத்திற்கு 1ம் வாதி பெயரில் பட்டா ஏற்பட்டு, அவர் இறந்த பிறகு 2 முதல் 5 வாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் தான் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்தில் 2 முதல் 4 வாதிகள் கதவு எண்.9/47 என்ற எண்ணில் அட்டை வீடு கட்டி, வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அது மாட்டு கொட்டகை ஆகும். அந்த மாட்டு கொட்டாயிலேயே அவர்கள் படுத்துக்கொள்கிறார்கள். தாவா சொத்தில் போர்வெல் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 2 வருடங்களாக பாகபிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதாக கூறி, பிரதிவாதிகள் நிலத்தை ஓட்டக்கூடாது என்று வாதிகளிடம் தகராறு செய்து வருகிறார்கள் என்றும், இருவர் மீதும் வழக்குகள் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருக்கு உண்டான பாகம் வேண்டும் என்று கேட்கிறார். தாவா சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், தாவா ொசத்துக்களும், இதர சொத்துக்களும் 1964 லிலேயே பாகம் ஏற்பட்டுவிட்டது என்றும், அதனால் இந்த வழக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றும், பாகபிரிவினை ஏற்பட்டு விட்டதை மோசடியாக ஏற்பட்டுவிட்டது என்று கூறி, தனியாக பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்து, நிலுவையில் வைத்து, பிரச்சனை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள் அனுபவித்து வருவதை தடுப்பதற்கு 1ம் வாதி எந்த உரிமையும் இல்லை என்றும், 1ம் வாதி என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.